www.Padasalai.Net

# இரண்டாம் பருவ இடைத்தேர்வு – 2022

வகுப்பு - 11 | தாவரவியல் | மதிப்பெண் : 50

காலம் : 1.30 மணி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10 x 1 = 10

1. ஜிம்னோஸ்பெர்ம்களில் சல்லடைக் குழாய்களைக் கட்டுப்படுத்துவது எது?
   அ) அருகாமையில் உள்ள சல்லடைக் குழாய்கள் ஆ) ஃபுளோயம் பாரங்கைமா செல்கள்
   இ) துணைச் செல்களின் உட்கருக்கள் ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
2. இருவிதையிலைத் தாவரங்களில் ஒட்டுப் போடுதல் வெற்றிகரமாக உள்ளது. ஆனால், ஒருவிதையிலைத் தாவரங்களில் அவ்வாறு இல்லை, ஏனென்றால் இருவிதையிலை தாவரங்களில்
   அ) வளையமாக வாஸ்குலக் கற்றைகள் அமைந்திருப்பது
   ஆ) இரண்டாம் நிலை வளர்ச்சிக்கான கேம்பியம் அமைந்துள்ளது.
   இ) சைலக்குழாய் கூறுகள் ஒரு முனையில் இருந்து அடுத்த முனைவரை இணைந்து அமைந்திருப்பது.
   ஈ) கார்க் கேம்பியம் அமைந்திருப்பது.
3. வழக்கமாக குப்பி தக்கை எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?
   அ) டெர்மடோஜன் ஆ) ஃபெல்லோஜென் இ) வாஸ்குலக் கேம்பியம் ஈ) சைலம்
4. வறண்ட நிலத் தாவரமான ஒபன்ஷியாவில் எவ்வகை நீராவிபோக்கு சாத்தியம்?
   அ) இலைத்துளை நீராவிபோக்கு ஆ) லென்டிசெல் நீராவிப்போக்கு
   இ) கியூட்டிகிள் நீராவிப்போக்கு ஈ) மேற்கூறிய அனைத்தும்
5. மீண்டும் இடம்பெயராத தனிமம் எது?
   அ) பாஸ்பரஸ் ஆ) பொட்டாசியம் இ) கால்சியம் ஈ) நைட்ரஜன்
6. பொருத்தமான இணையைத் தேர்ந்தெடு.
   1. சிட்ரஸ் அழுநுனி இறப்பு - (i) Mo
   2. சாட்டை வால் நோய் - (ii) Zn
   3. பழுப்பு மையக் கருகல் நோய் - (iii) Cu
   4. சிற்றிலை நோய் - (iv) B
   அ) 1 (iii) 2 (ii) 3 (iv) 4 (i) ஆ) 1 (iii) 2 (i) 3 (iv) 4 (ii)
   இ) 1(i) 2 (iii) 3 (ii) 4 (iv) ஈ) 1 (iii) 2 (iv) 3 (ii) 4 (i)
7. முன்ச்சின் கருத்தாக்கம் எதை அடிப்படையாக கொண்டது
   அ) விறைப்பழுத்த சரிவு மற்றும் உள்ளீர்த்தல் விசை காரணமாக உணவு இடைப்பெயர்ச்சி அடைதல்
   ஆ) விறைப்பழுத்தம் காரணமாக உணவு இடம்பெயர்தல்
   இ) உள்ளீர்த்தல் விசை காரணமாக உணவு இடம்பெயர்தல்
   ஈ) மேற்கூறியவற்றுள் எதுவும் இல்லை
8. கீழ்க்கண்டவற்றை படித்து சரியான விடையைத் தேர்ந்தெடு.
   i) எக்ஸார்க் எனப்படுவது மெட்டாசைலத்திற்கு வெளியே புரோட்டோசைலம் அமைந்துள்ளது.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net

ii) எண்டார்க் எனப்படுவது புரோட்டோசைலம் மையத்தை நோக்கி அமைந்துள்ளது.

iii) சென்ட்ராக் எனப்படுவது புரோட்டோசைலத்திற்கு நடுவில் மெட்டாசைலம் அமைந்துள்ளது

iv) மீஸார்க் என்பது மெட்டாசைலத்திற்கு நடுவில் புரோட்டோசைலம் அமைந்துள்ளது

அ) i, ii மற்றும் iii மட்டும் ஆ) ii, iii மற்றும் iv மட்டும்

இ) i, ii, மற்றும் iv மட்டும் ஈ) இவை அனைத்தும்

9. தாவர உள்ளமைப்பியலின் தந்தை யார்?

அ) ஈசா ஆ) நெகேமியா இ) லின்னேயஸ் ஈ) லீவான்வேஹாக்

10. தாவரத்தின் உயிருள்ள பகுதி எது?

அ) வைரக்கட்டை ஆ) வன்கட்டை இ) மென்கட்டை ஈ) சாற்றுக்கட்டை

**II. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண்.16 கட்டாய வினா) 5 x 2 = 10**

11. தாவரத்தில் சுக்ரோஸினை பெறும் ஒளிச்சேர்க்கை செய்யவியலாத பகுதிகளை பட்டியலிடுக.
12. ஸ்கிளிரன்கைமா மற்றும் டிரக்கீடுகள் ஏன் இறந்த செல்களாகக் காணப்படுகிறது?
13. டிரைக்கோம்கள் என்றால் என்ன?
14. தாவரவியலின் படி கட்டை என்பது என்ன?
15. போலி ஆண்டு வளையம் என்றால் என்ன?
16. சவ்வூடுபரவல் அல்லது ஆஸ்மாஸிஸ் என்றால் என்ன?
17. நைட்ரஜன் வளிமண்டலத்தில் அதிகம் இருந்தாலும் தாவரங்கள் அதனை பயன்படுத்த முடிவதில்லை, ஏன்?
18. பெரும் ஊட்ட மூலங்கள் என்பன யாவை?

**III. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண். 26 கட்டாய வினா) 5 x 3 = 15**

19. ஆக்குத் திசுவின் பண்புகள் யாவை?
20. இடியோபிளாஸ்ட்கள் என்றால் என்ன?
21. கட்டையை பதப்படுத்தும் செயற்கை முறையை விளக்குக.
22. தொடர்ந்து பகுப்பையும் திசு ஆக்குத்திசுவாகும் பக்க ஆக்குத்திசுவின் செயல்பாட்டை இதனுடன் தொடர்புபடுத்துக.
23. நீராவிப்போக்கு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
24. பிளாஸ்மா சிதைவின் வகைகள் யாவை?
25. நைட்ரஜன் நிலை நிறுத்தத்தில் நைட்ரோஜினேஸ் நொதியின் பங்கினை விவரி?
26. லெக் ஹுமோகுளோபின் என்பது என்ன? அதன் பணி யாது?

**IV. ஏதேனும் மூன்று வினாகளுக்கு விரிவான விடையளி. 3 x 5 = 15**

27. அ) ஸ்கிளிரைடுகளின் வகைகளை விவரி? (அல்லது)

ஆ) இருப்பிடத்தின் அடிப்படையில் ஆக்குத்திசுக்களை வகைப்படுத்துக.

28. அ) நீ புதிதாக வீடு கட்ட, மரக்கடைக்குச் சென்று மரம் வாங்கும் பொழுது நேர்த்தியான கட்டையை எவ்வாறு தேர்ந்தெடுப்பாய்?

ஆ) ஆண்டு வளையங்கள் பற்றி குறிப்பு வரைக.

29. அ) நீரியல் திறனைக் கட்டுப்படுத்தும் கூறுகள் பற்றி விவரி. (அல்லது)

ஆ) நைட்ரஜன் சுழற்சியை விவரி?



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner